**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எஸ்.விஜய் அழகிரி, பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.1124/2023

வா.சா.1 மோகனசுந்தரி

**குறுக்குவிசாரணை 1வது பிரதிவாதி தரப்பில்**

2வது பிரதிவாதி என்னுடைய அத்தை ஆவார். 24.10.2019 தேதியில் 2வது பிரதிவாதி 1வது பிரதிவாதிக்கு ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்திருக்கிறார் என்றால் சரிதான். என்னுடைய சொத்தையும் சேர்த்து எழுதி வைத்திருக்கிறார். 1, 2 பிரதிவாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதியின் மகன்கள் அந்த சொத்தில் ஒரு பகுதியை தங்கராசு என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரிதான். இன்னொரு பகுதியை கிருஷ்ணவேணி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரிதான். தங்கராசு, கிருஷ்ணவேணிக்கு விற்பனை செய்தது வேறு சொத்தாகும். செட்டில்மெண்ட் சொத்து கிடையாது. தங்கராசு, கிருஷ்ணவேணிக்கு விற்பனை செய்த சொத்தை வழக்கில் காட்டியிருக்கிறேன். தங்கராசு, கிருஷ்ணவேணியை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் தங்கராசு, கிருஷ்ணவேணி வாங்கிய கிரையம் என்னை கட்டுப்பாடுத்தாது என்ற பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். 1வது பிரதிவாதியின் மகன்கள் மேகநாதன், சரவணன் ஆகியோர்களுக்கு தாவா சொத்தில் பங்கு இருக்கிறது என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்தபிறகு சொத்தை பிரித்து தர சொல்லி நோட்டிசோ, வழக்கோ இதற்கு முன்பு போடவில்லையென்றால் சரிதான். 13.10.1983ம் தேதியில் எனது தகப்பனார் இறந்தபிறகு நான் தாவா சொத்துக்களை அனுபவித்து வருவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் எல்லாம் என் பெரியப்பா பெயரிலுள்ளது. எனது அப்பா எனது தாத்தாவிற்கு முன்பே இறந்துவிட்டார். எனது பெரியப்பா எனக்கு சொத்தில் பங்கு

இல்லை என்றும் பிரித்து தரமாட்டேன் என்று பிரச்சனை செய்கிறார் என்றால் சரிதான். 10 வருடமாக பிரச்சனை இருக்குமா என்றால் 2, 3 வருடமாகத் தான் பிரச்சனை இருந்து வருகிறது. தங்கராசு, கிருஷ்ணவேணி செக்குபந்தி போட்டு கிரையம் வாங்கிய பத்திரத்தை நான் படித்து பார்த்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. என் அப்பா இறந்தபிறகு தாவா சொத்தில் எந்த பகுதியில் குறிப்பிட்டு அனுபவித்து வருகிறேன் என்று சொல்லமுடியாது என்றால் சரிதான். எனது பெரியப்பா தரப்பில் நாங்கள் ஏற்கனவே சொத்தை விடுதலை செய்து கொடுத்துவிட்டோம் என்றும், அதனால் சொத்தில் எங்களுக்கு பங்கில்லை என்று கூறுகிறார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 உயில் சாசனத்தின்படி சொத்தை எங்கள் பெயருக்கு மாற்ற நடவடிக்கை எடுத்தோமா என்றால் அவரவர்கள் காட்டை அவரவர்கள் ஓட்டி வந்தோம் அதனால் நடவடிக்கை எடுக்கவில்லை. சொத்திற்கு சொந்தக்காரர்களை சேர்க்காததாலும், சரியான சொத்துவிவரம் கொடுக்காததாலும் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நாங்கள் சொத்தின் சுவாதீனத்தில் இல்லை என்றும் அதனால் நாங்கள் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாக பொய்யா வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கில் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**